5299

**கற்றல் ஊக்கி - 7.4**

பாடம் :- **வரலாறு**

தரம் :- 07

**அறிவுறுத்தல்கள்**

❖ வினாக்களைப் பகுதியாகவோ முழுமையாகவோ கற்பித்தலின்போதோ அல்லது அலகு முடிவிலோ வசதிக்கேற்ப பயன்படுத்தலாம்.

❖ தேர்ச்சி அடிப்படையிலான விளக்கமளிப்பதற்கும் கணிப்பீட்டிற்கும் இது பயன்படுத்தப்படலாம்.

| பெயர் | |
|---|---|

**Aaruthal** Sri Lanka

**2017 - தவணை - 03**

| பரீட்சையாளரின் பாவனைக்கு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பகுதி | A | B | | | | | மொத்தப் புள்ளி |
| வினா எண் | 1 | 1 | 2 | 3 | 4 | 5 | |
| ஒதுக்கப்பட்ட புள்ளி | 40 | 05 | 05 | 06 | 04 | 40 | 100 |
| பெற்ற புள்ளி | | | | | | | |

## பிற்கால ஆட்சி மையங்கள்

### பகுதி - A

❖ **பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கான உடனடிக்காரணி
(1) சிம்மாசனப் போட்டி
(2) திறமையற்ற அரசனின் ஆட்சி
(3) பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமை
(4) கலிங்கமாகனின் படையெடுப்பு

02) பொலன்னறுவை இராச்சியத்தின் இறுதி மன்னன்
(1) மகா பராக்கிரமபாகு (2) பராக்கிரமபாண்டியன்
(3) விக்கிரமபாண்டியன் (4) நிஸங்கமல்லன்

03) மினிப்பே கந்தெனிய குன்றில் கோட்டை அமைத்தவன்
(1) சுப சேனாதிபதி (2) நிஸ்ஸங்க அழகேஸ்வர
(3) சங்க சேனாதிபதி (4) சேனாலங்காதீஸ்வரர்

04) கி. பி. 1215 இல் இலங்கைக்கு படை எடுத்த ஆக்கிரமிப்பாளர்
(1) கலிங்கமாகன் (2) சந்திரபானு
(3) செங்கோ (4) சேனன் குத்திகன்

05) இராசரட்டைக்கால பாரம்பரிய வர்த்தகப் பொருட்கள்
(1) யானை, முத்து, இரத்தினம்
(2) தேயிலை, இறப்பர், தெங்கு
(3) பருத்தி, குதிரை, வாசனைத் திரவியம்
(4) கற்பூரம், பட்டு, முத்து

06) ஈரவலயத்தில் நெற்பயிற்ச்செய்கை மேற்கொண்ட முறை
(1) சேற்றுநிலப் பயிர்ச்செய்கை
(2) சதுப்புநிலப் பயிர்ச்செய்கை
(3) படிமுறைப் பயிர்ச்செய்கை
(4) மேட்டுநிலப் பயிர்ச்செய்கை

07) தம்பதெனியா இராச்சியத்தை உருவாக்கிய மன்னன்
(1) 1 ஆம் விஜயபாகு (2) 2 ஆம் பராக்கிரமபாகு
(3) 3 ஆம் விஜயபாகு (4) 6 ஆம் பராக்கிரமபாகு

 Copyright © Aaruthal 2017 

08) மாகனின் படையெடுப்பின் போது பௌத்த குருமார் தந்த, பத்திர தாதுக்களை எடுத்து பாதுகாப்பாக வைத்த இடம்

(1) பெலிகலை (2) கொத்மலை
(3) கடலாதெனிய (4) சிகிரியா

09) மலாய குடாநாட்டைச் சேர்ந்த சந்திரபானு இருதடவைகள் இலங்கையை ஆக்கிரமித்த போது அதனை முறியடித்த மன்னன்

(1) 2 ஆம் பராக்கிரமபாகு (2) 1 ஆம் பராக்கிரமபாகு
(3) 4 ஆம் பராக்கிரமபாகு (4) 6 ஆம் பராக்கிரமபாகு

10) "A" நிரலில் கோட்டைகளும் "B" நிரலில் அதனை அமைத்தவர்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளது. அவற்றைத் தொடர்புபடுத்தி சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| 1. மினிப்பே கோட்டை | A - புவனேகபாகு (ஆதிபாதன்) |
| 2. யாப்பகூவ கோட்டை | B - சங்க சேனாதிபதி |
| 3. கோவிந்தமலை கோட்டை | C - சுப சேனாதிபதி |

(1) BAC (2) BCA (3) CAB (4) CBA

11) "கலிகால சாஹித்ய சர்வக்ஞ பண்டித" என்னும் புகழ் பெற்ற தம்பதெனிய கால மன்னன்

(1) 3 ஆம் விஜயபாகு
(2) வத்தேகம விஜயபாகு
(3) 4 ஆம் பராக்கிரமபாகு
(4) 2 ஆம் பராக்கிரமபாகு

12) குருணாகல் இராச்சியத்துக்குரிய இலக்கியங்கள்

(1) கவிசிலுமின, போதிவங்ஸய
(2) கவிசிலுமின, அநாகதவங்ஸய
(3) காவிசேகர, தலதாசிரித
(4) தலதாசிரித, போதிவங்சய

13) கம்பளை இராச்சிய காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த தேசசஞ்சாரி

(1) பாகியன் (2) மார்க்கப்போலோ
(3) இபன்பதூதா (4) றொபேட்நொக்ஸ்

14) 6 ஆம் பராக்கிரமபாகு மன்னன் யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றிகொள்ள தம் சார்பில் அனுப்பியவர்

(1) ஜோதிய (2) சப்புமல்குமரன்
(3) அம்புலுகலகுமாரன் (4) நிஸங்க அழகேஸ்வரன்.

15) மலையக இராச்சியத்தில் ஜோதிய இளவரசனின் கிளர்ச்சியை அடக்கியவர்

(1) அம்புலகலகுமரன் (2) சுப சேனாதிபதி
(3) சப்புமல்குமரன் (4) லங்காதீஸ்வர

16) A நிரலில் இராச்சியங்களும் B நிரலில் இராச்சியங்களை உருவாக்கிய மன்னர்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளது. அவற்றைத் தொடர்புபடுத்தி சரியான விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.

| A | | B |
|---|---|---|
| 1. | தம்பதெனியா | A - 2 ஆம் புவனேகபாகு |
| 2. | யாப்பகூவ | B - 4 ஆம் புவனேகபாகு |
| 3. | குருநாகல் | C - 3 ஆம் விஜயபாகு |
| 4. | கம்பளை | D - 6 ஆம் பராக்கிரமபாகு |
| 5. | கோட்டை | E - 1 ஆம் புவனேகபாகு |

(1) BADCE (2) CEBDA (3) CEADB (4) CEABD

17) யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னன்
(1) பரராஜசேகரன்
(2) விஜயகூழங்கை
(3) ஆரியச்சக்கரவர்த்தி
(4) சங்கிலி

18) பெலிகலை தலதாமாளிகை அமைந்த மாவட்டம்
(1) அநுராதபுரம் (2) பொலன்னறுவை
(3) கேகாலை (4) கண்டி

19) ஆரியச் சக்கரவத்திகளால் ஆட்சி செய்யப்பட்ட இராச்சியம்
(1) தம்பதேனியா (2) கம்பளை
(3) கோட்டை (4) யாழ்ப்பாணம்

20) கம்பளை இராச்சியத்தில் அமைக்கப்பட்ட மரச் செதுக்கல் வேலைபாடுகளுக்குப் பிரபல்யமான வழிபாட்டிடம்
(1) அம்பக்கே தேவாலயம்
(2) லங்காதிலக விகாரை
(3) கடலாதெனிய விகாரை
(4) பெலிகல விகாரை


($20 \times 2 = 40$ புள்ளிகள்)

பகுதி - B

01) பின்வரும் இராசதானிகளை இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

(i) யாழ்ப்பாணம் (ii) கம்பளை (iii) கோட்டை

(iv) பொலன்னறுவை (v) அநுராதபுரம் (5 புள்ளி)



 Copyright © Aaruthal 2017 

02) பின்வரும் படங்களை அவதானித்து அவற்றின் பெயரைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i)




..............................................................................

(ii)




..............................................................................

(iii)




..............................................................................

(iv)



..............................................................................


(v)



..............................................................................

(5 புள்ளி)

03) அருகில் உள்ள படத்தை அவதானித்து விடை தருக.



(i) படத்தில் காணப்படும் கோவிலின் பெயரை எழுதுக.

..............................................................................

(ii) இக்கோவில் காணப்பட்ட இராசதானி எது?

..............................................................................

(iii) இக்கோவிலுடன் தொடர்புடைய மதத்தவர்கள் யார்?

..............................................................................

$(3 \times 2 = 6$ புள்ளி)


Copyright © Aaruthal 2017

04) **பின்வரும் விடயங்களை வாசித்து விடை எழுதுக.**

(i) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது யாழ்ப்பாண இராசதானியை ஆட்சி செய்தவர் ..............................

(ii) இலங்கையை ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்த கோட்டை இராச்சிய மன்னன்

..............................

(iii) இலங்கையை ஆக்கிரமித்த சீனத் தளபதி ..............................

(iv) பெலிகலை மலையில் தலதாமாளிகை கட்டிய மன்னன் ..............................

(4 புள்ளி)

05) **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

(1) (i) தம்பதெனிய இராச்சியத்தை ஆட்சி செய்த இரு மன்னர்களின் பெயர்களைத் தருக.

..............................

..............................

(2 புள்ளி)

(ii) மாகனின் தெற்கு நோக்கிய படையெடுப்பை கட்டுப்படுத்த கோட்டைகளை அமைத்த மூவரின் பெயர்களைத் தருக.

..............................

..............................

..............................

(3 புள்ளி)

(iii) 2 ஆம் பராக்கிரமபாகுவின் அரசியல் பணிகள் மூன்றும் பொருளாதாரப் பணிகள் இரண்டும் எழுதுக.

அரசியல் பணிகள் ..............................

..............................

..............................

பொருளாதாரப் பணிகள் ..............................

..............................

(5 புள்ளி)

(2) (i) 1 ஆம் புவனேகபாகு

அ) வியாபார தொடர்பு கொண்ட நாடு ..............................

ஆ) தூதுக்குழுவை அனுப்பிய நகர் ..............................

(ii) 1 ஆம் புவனேகபாகுவின் பணிகள் மூன்று எழுதுக.

..............................

..............................

..............................

(iii) 5 ஆம் புவனேகபாகுவின் ஆட்சியில் இடம்பெற்ற நிகழ்வுகள் ஐந்து எழுதுக.

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(10 புள்ளி)

(3) (i) 6 ஆம் பராக்கிரமபாகுவின்

அ) தந்தை பெயர் .............................................................................

ஆ) தாய் பெயர் .............................................................................

(ii) 6 ஆம் பராக்கிரமபாகுவினால் அமைக்கப்பட்ட பிரிவேனாக்கள் மூன்று எழுதுக.

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(iii) 6 ஆம் பராக்கிரமபாகுவின் அரசியல் பணிகள் ஐந்து எழுதுக.

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(10 புள்ளி)

(4) (i) யாழ்ப்பாண இராசதானியின் வரலாறு கூறும் நூல்கள் இரண்டு எழுதுக.

.............................................................................................................

.............................................................................................................

(ii) யாழ்ப்பாண இராச்சியத்தின்

அ) முதல் மன்னன் .............................................................................

ஆ) இறுதிமன்னன் .............................................................................

(iii) யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஐந்து மன்னர்களின் பெயர்களை எழுதுக.

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(10 புள்ளி)

 Copyright © Aaruthal 2017 

## தகவல் பத்திரம்

* அநுராதபுர இராச்சியம் - 1500 வருடங்கள் நிலைத்திருந்தது.
* பொலன்னறுவை இராச்சியம் - 150 வருடங்கள் நிலைத்திருந்தது.
* இவ்விரு இராச்சிய காலம் இராசரட்டை நாகரிகம் எனப்பட்டது.
* பொலன்னறுவை வீழ்ச்சியான கி. பி. 1215 தொடக்கம் கோட்டை இராச்சிய ஆரம்பம் கி. பி. 1415 வரை 200 வருடங்கள் தென்மேற்கு பகுதியில் ஐந்து தலைநகர்கள் உருவாகின.

| தலைநகர்கள் | நிலைத்திருந்த காலப்பகுதி |
|---|---|
| • தம்பதேனியா<br>• யாப்பகூவ<br>• குருநாகல்<br>• கம்பளை<br>• கோட்டே | கி. பி. 1232 - 1272 |

* மாகனின் தென்பகுதி வருகையை தடுக்கவும் மக்களைப் பாதுகாக்கவும் கோட்டைகளை அமைத்தவர்கள்

| | |
|---|---|
| • சங்கசேனாதிபதி | மினிப்பேயில் கந்தெனிய குன்றில் கோட்டை அமைத்தமை. |
| • சுபசேனாதிபதி | யாப்பகூவ குன்றின் உச்சியில் கோட்டை அமைத்தமை. |
| • ஆதிபாத புவனேகபாகு | உருகுணையில் கோவிந்த மலை உச்சியில் கோட்டை அமைத்தமை |

| இராசதானி | தலை சிறந்த மன்னர்கள் | பணிகளும் சிறப்புகளும் |
|---|---|---|
| தம்பதெனியா | 3 ஆம் விஜயபாகு<br>கி. பி. 1232 - 1236 | • வன்னி விஜயபாகு, வத்மிகி விஜயபாகு என அழைக்கப்பட்டவன். |
| | | • தம்பதெனிய இராச்சியத்தின் முதல் மன்னன் |
| | | • கொத்மலையில் ஒளித்து வைத்திருந்த தந்த, பத்திர தாதுவை கொண்டு வந்தவன் |
| | | • தந்த பத்திர தாதுவை எடுத்து வந்து கேகாலை மாவட்டத்தில் பெலிகலை மலை உச்சியில் தலதாமாளிகை கட்டினான். |
| | 2ம் பராக்கிரமபாகு<br>கி. பி. 1236 - 1270 | • கலிங்கமாகனிடம் இருந்து நாட்டை மீட்டான். |
| | | • சந்திரபானுவின் ஆக்கிரமிப்பை இரு தடவை முறியடித்தான். |
| | | • தம்பதெனியாவில் தலதாமாளிகை கட்டி புனித தந்ததாதுவை பாதுகாத்தான். |
| | | • தேவபதிராஜ அமைச்சர் மூலம் நாட்டின் அபிவிருத்தியை மேற்கொண்டான். |
| | | • சிவனொளிபாத மலைக்கு செல்லும் பாதையை சீர்திருத்தினான். |
| | | • நந்தவனங்களை அமைத்து பாலங்களை நிர்மாணித்தான். |

 Copyright © Aaruthal 2017 

| | | |
|---|---|---|
| தம்பதெனியா | 2ம் பராக்கிரமபாகு<br>கி. பி. 1236 - 1270 | • தெற்கு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டான்.<br>• இலக்கியங்களை எழுதியமை.<br>• நாட்டை ஒன்றுபடுத்தியமை<br>• கவிசிலுமின எனும் காவிய நூலை எழுதினான்.<br>• **"கலிகால சாஹித்ய சர்வக்ஞ பண்டிதர்"** என்ற பெயரால் போற்றப்பட்டான். |
| யாப்பகூவ | 1 ஆம் புவனேகபாகு | • முதல் மன்னன்<br>• யாப்பகூவாவில் தலதாமாளிகையை அமைத்தான்.<br>• பௌத்த நூல்களை எழுதுவித்தான்.<br>• எகிப்துடன் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டான்.<br>• வியாபார நடவடிக்கைக்காக எகிப்தின் கெய்ரோ நகருக்கு தூதுக்குழுவை அனுப்பினான். |
| குருநாகல் | 2 ஆம் புவனேகபாகு | • முதல் மன்னன்.<br>• குருநாகலை இராசதானியாக தெரிவு செய்தான். |
| | 4 அம் பராக்கிரமபாகு | • சிரேஷ்ட அரசனாக இருந்தான்.<br>• பாளி மொழியில் எழுதப்பட்ட **பன்சிய பனஸ் ஜாதகய** நூலை சிங்களத்தில் மொழிபெயர்த்தான்.<br>• இலக்கிய நூல்கள் எழுத காரணமானவன் உ+ம் : தலதாசிரித, சிங்களபோதிவங்ஸய, அநாகத வங்ஸய |
| கம்பளை | 4 ஆம் புவனேகபாகு | • முதல் மன்னன். |
| | 5 ஆம் புவனேகபாகு | • அரசருக்கு மேலதிகமாக அதிகாரம் மிக்க இரு தலைவர்கள் காணப்பட்டமை. உ+ம் : நிஸ்ஸங்க அழகேஸ்வர சேனாலங்காதீஸ்வர<br>• இபன்பதுதா அரேபிய தேசசஞ்சாரி வருகை தந்தமை.<br>• நிஸங்க அழகேஸ்வர ஸ்ரீ ஜயவர்த்தன புராவில் கோட்டையை நிறுவியமை<br>• சீனாவில் இருந்து வந்த செங்கோ தளபதி ஆக்கிரமித்தமை.<br>• கடலாதெனிய, லங்காதிலக வினாரை, எம்பக்கே தேவாலயம் கட்டப்பட்டமை. |

| | | |
|---|---|---|
| கோட்டை | 6 ஆம் பராக்கிரமபாகு | • முதல் மன்னன் |
| | | • பெற்றோர் தந்தை : ஜயமஹலே<br>தாய் : சுனேத்திராதேவி |
| | | • இலங்கையை ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்த இறுதி மன்னன் |
| | | • யாழ்ப்பாணத்தை சப்புமல்குமாரனை அனுப்பி வெற்றி கொண்டு தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். |
| | | • மலைநாட்டில் ஜோதிய இளவரசன் கிளர்ச்சி அம்புலகலகுமாரன் மூலம் அடக்கினான். |
| | | • கல்வித்துறை எழுச்சியுற பிரிவேனாக்கள் உருவாக்கினான்.<br>உ+ம் : பெப்பிலியானே சுனேத்திராதேவி பிரிவெனா, கேரகல பத்மாவதி பிரிவெனா |
| | | • கல்விமான்கள் தோற்றம் பெற்றனர்.<br>உ+ம் : வீதாகம மைத்திரிதேரர்<br>தொட்டகமுவே ஸ்ரீராகுலதேரர் |
| | | • இலக்கிய ஆக்கங்கள் எழுதப்பட்டமை.<br>உ+ம் : தூது காவியங்களான<br>✓ செலலிஹினி சந்தேசய<br>✓ ஹங்ஸ சந்தேசகிரா சந்தேசய<br>✓ பெரகும்ப சிரித<br>✓ காவியசேகர |
| யாழ்ப்பாண இராச்சியம் | • பொலன்னறுவை வீழ்ச்சியின் பின் பிராந்திய அரசாக உருவானது. | |
| | • இராச்சியம் பற்றி அறிய உதவும் மூலாதாரங்கள்<br>உ+ம் : யாழ்ப்பாண வைபவமாலை, செகராசசேகரமாலை | |
| | • அரச வம்சம் : ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரை<br>இவ் வம்சம் சார்ந்த பன்னிரு மன்னர்கள் ஆட்சி புரிந்தனர்.<br>முதல் மன்னன் விஜய கூழங்கை சிங்கை ஆரியன் | |
| | • போர்த்துக்கேயர் வருகையின் போது ஆட்சி செய்த மன்னன் பரராஜசேகரன் | |
| | • இறுதி மன்னன் சங்கிலி | |
| | • கோட்டை காலத்தில் இவ் இராச்சியம் அதன் ஆதிக்கத்தின் கீழ் வந்த போதும் பிற்காலத்தில் மீட்கப்பட்டது. | |
| | • கி. பி. 1619 இவ் இராச்சியம் போர்த்துக்கேயர் வசமானது. | |